● தலைமன்னார்த்துறை — தாராபுரம் வரையும் உள்ள பகுதிகள்

# மன்னார்த்தீவில் பாதுகாப்பு வலயங்கள்

மன்னார் தீவில் சில இடங்கள் பாதுகாப்பு வலயங்களாக் அறிவிக்கப்பட்டதையடுத்து அதிகமான மக்கள் இப்பகுதியிலிருந்து வெளியேறி மன்னார் நகரப்பகுதியிலும் பேசாலையிலும் தங்கியுள்ளனர். மன்னார் தாராபுரத்தில் ஒரு பகுதியிலிருந்து தலைமன்னார் துறை வரைக்கும் உள்ள சில பகுதிகள் மக்கள் நடமாட முடியாத பகுதியாக இராணுவத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. கீரி, சிறுத்தோப்பு, நடுக்குடா, புட்டுக்குடியிருப்பு, கட்டுக்காரன் குடியிருப்பு ஆகிய பகுதிகளிலிருந்தே மக்கள்வெளியேறியுள்ளனர். கால்நடைவளர்ப்பு பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டுவரும் இப்பகுதி மக்கள் இவற்றைக்கைவிட்டு வெளியேறியுள்ளனர் இதேவேளை மன்னார் மாவட்டத்தில் காலபோக விவசாயம் இம்முறை 15 வீதமே இடம்பெற்றுள்ளது. ஐயாயிரம் ஏக்கரில் நெற்செய்கையும், ஆயிரம் ஏக்கரில் உபஉணவுச் செய்கையும்இடம்பெற்றதாக விவசாயப்பகுதி அதிகாரி ஒருவர் கூறினார்.

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 : 50

# முரசொலி

முரசு 05 ஒலி 177 பிரசோற்பத்தி வைகாசி 10 (24-05-1991) வெள்ளி

# வெசாக்தினத்தைமுன்னிட்டு

# 3 நாள்கள் யுத்த நிறுத்தம்

## பௌத்த மஹா சங்கத்தினரின் கோரிக்கையை அரசு ஏற்றது!

வெசாக் தினத்தை முன்னிட்டு அரசு ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை அறிவித்துள்ளது. யுத்தநிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு பௌத்த பிக்குகளின் மஹா சங்கம் அரசிடம் கோரிக்கை விட்டதற்கமையவே அரசு இம் முடிவை எடுத்துள்ளது.

எதிர்வரும் வெசாக் தினத்தை முன்னிட்டு மூன்று தினங்களுக்கு யுத்த நிறுத்தம் செய்வதாக அரசு ஒரு தலைப்பட்சமாக அறிவித்துள்ளது.

26ஆம் திகதி நள்ளிரவு முதல் 29 ஆம் திகதி நள்ளிரவு வரை இராணுவம் தமது நடவடிக்கைகளை நிறுத்துவர் என பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் சிறில் ரணதுங்க நேற்று அறிவித்தார்.

வெசாக் தினத்தை முன்னிட்டு யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என பௌத்த மஹா சங்கத்தினர் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே

— 04 ஆம் பக்கம் பார்க்க

## தலைமைப் பதவியை ஏற்க சோனியா காந்தி மறுப்பு

இந்திரா காங்கிரஸ் தலைமைப்பதவியை ஏற்க திருமதி சோனியா காந்தி மறுத்து விட்டார்.

திருமதி சோனியா காந்தி தலைவராக நியமிக்கப்பட்ட செய்தி அவருக்கு அறிவிக்கப்பட்ட போதே அவர் இதை ஏற்கமுடியாது எனக் குறிப்பிட்டார்.

தனக்கும் தமது குடும்பத்

—04ஆம் பக்கம் பார்க்க

## அவசரதேசிய அரசாங்கம் இந்திய ஜனாதிபதி முயற்சி

இந்தியாவில் அவசர தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஜனாதிபதி வெங்கட்ராமன் ஈடுபட்டுள்ளார்.

அவர் நேற்று சகல அரசியல் கட்சித் தலைவர்களுடனும் பேச்சு நடாத்தினார். முன்னாள் ஜனாதிபதி சஞ்சீவ ரெட்டியுடனும் தனியாக முறையில் பேச்சுவார்த்தை

— 04 ஆம் பக்கம் பார்க்க

## தமிழகத்தில் தொடர்ந்தும் வன்செயல்கள் நடைபெறுகின்றன

நேற்றும் சென்னையில் பரவலாக வன்செயல்கள் இடம்பெற்றன. சில அரசியல் கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டதாக வதந்திகள் பரவியதனால் வன்செயல்கள் தீவிரமடைந்தன.

இதேசமயம் தமிழ் நாட்டுக்கு விசேஷமாக அனுப்பி வைக்கப்பட்ட இராணுவத்தினர் வந்து சேர்ந்துள்ள

— 04 ஆம் பக்கம் பார்க்க

## திருவான்மியூரில் 15 பேர் தமிழக பொலிஸாரால் கைது

சென்னை திருவான்மியூர் பகுதியில் நேற்று தமிழக பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இப்பகுதியில் உள்ள ஈழத் தமிழர்களின் இருப்பிடங்களே இவ்வாறு சோதனையிடப்பட்டது. இங்கிருந்து 25 ஈழப்போராளிகள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார்

—04 ஆம் பக்கம் பார்க்க

## அகதி முகாமிலிருந்து 15பேர் தப்பியோடி விட்டனர்

சென்னைக்கு அருகில் இருந்த அகதி முகாமிலிருந்து 15 பேர் தப்பியோடி விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முகாமில் தமிழ் குழுவைச் சேர்ந்த 227 பேர் தங்கியிருந்தனர். இவர்களில் 15 பேரே இவ்வாறு தப்பியோடி விட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ராஜீவ் கொலை தொடர்பாக

## புலன் விசாரணை நடாத்த இலங்கை அனுமதி வழங்குமாம்

ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டது குறித்து இந்திய புலனாய்வு அதிகாரிகள் இலங்கையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ள முடியும் என பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்திய அதிகாரிகள் இல

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் ஷெல் தாக்குதல்

## ஒருவர் பலி; மூவர் காயம்

வவுனியாவில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனால் சைக்கிளில் சென்ற மூவர் காயமடைந்தனர். ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐ நந்தகுமார் (22) எம். மாணிக்கதாசன் (34), கதிர்காமநாதன் (26) ஆகியோரே இதில் காயமடைந்தவர்களாவர். 38, 74

ஒரே குடும்பத்தவர்கள்

## நண்டுக்கறி உண்டதால் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதி

நண்டுக்கறி சாப்பிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய் உட்பட மூன்று பிள்ளைகள் வாந்தி எடுத்ததால் யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இருபாலையைச் சேர்ந்த ஆர். விஜயலட்சுமி(44), ஆர் ஆரூரன்(10), ஆர். அருள் பிரியா(14), ஆர். சசிகரன்(12) ஆகியோரே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளனர். (74)

## மட்டு. பொலிஸ் இன்ஸ்பெக்டர் புலிகளால் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் மூர்த்தி விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற இச்சம்பவத்தின் போது இவரது மெய்ப்பாதுகாவலரான சேர்வ் பொலிஸ் கான்ஸ்டபிள் ரோகாணும் மற்றுமொருவரும் புலிகளால் சுட்டுக்கொல்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கொக்குத் தொடுவாயில் ஷெல், விமானத்தாக்குதல்கள்

மணலாறு மாவட்டத்தில் நேற்று ஷெல் தாக்குதலும், விமானத்தாக்குதலும் நடாத்தப்பட்டது.

நேற்றுக்காலை 4.45 மணி

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணம்

மணலாறு மாவட்டத்தில் நடைபெற்ற மோதலில் தீபன் (மயில்வாகனம் ராஜா ஆம்பாறை) மன்சூர் (காத்தமுத்து ஜெகதீசன் மட்டக்களப்பு) ஆகியோர் வீரமரணமடைந்தனர். 71

## இளைமர் தாக்குதல்

கட்டுவன் பகுதி இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் மாலை விடுதலைப் புலிகள் இளைஞர் தாக்குதலை மேற்கொண்டனர். சேத விபரம் தெரியவரவில்லை. 71

## கொழும்பில் சின்னம்மை

கொழும்பு மாநகரப்பகுதியில் தற்போதைய வெயில் காரணமாக சின்னம்மை பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக அகதி முகாம்களில் இவை பரவுவதாகவும் சுகாதாரப்பகுதியினர் தெரிவித்தனர். (38)

## க. பொ. த. பரீட்சை நேற்று ஆரம்பம்

தடைப்பட்டிருந்த க. பொ. த(உயர்தர)விசேட பரீட்சைகள் நேற்று மீண்டும் ஆரம்பமாகின. 70

## இன்று திறப்பு விழா

யாழ் மத்திய கல்லூரியின் கட்டுநகூச் சபைத் திறப்பு விழாஇன்றுநண்பகல் 12மணியளவில் நடைபெறவுள்ளது.

கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் இதனைத் திறந்து வைப்பார்.

## மடுவுக்கு உணவுப் பொருள்

மன்னார் மடு அகதி முகாமிலுள்ளவர்களுக்கு பதினான்கு லொறிகளில் உலர் உணவுப் பொருள்கள் இரண்டாவது தடவையாக நேற்று முன்தினம் அகதிகளுக்காக ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தால் அனுப்பி

—04 ஆம் பக்கம் பார்க்க

## ட்ரான்ஸ்போமரில் ஒயில் திருட்டு

கடந்த சனிக்கிழமை இரவு மாதகல் அந்தோனியார் கோயில் அருகில் உள்ள மின்மாற்றியில் மின்மாற்றி ஒயில் திருட முயன்ற இருவர் விடுதலைப் புலிகளால் மடக்கிப் பிடிக்கப்பட்டு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு பொது மக்கள் முன்னிலையில் அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்ட பின் விடுதலை செய்யப்பட்டனர். 48

## கைதிகளை விடுவிக்கக்கோரி ஆர்ப்பாட்டம்; ஆபிரிக்காவில் வின்னி மண்டேலா கைது

தென்னாபிரிக்க தேசிய விடுதலை இயக்கத் துணைத்தலைவர் நெல்சன் மண்டேலாவின் மனைவி திருமதி வின்னி நெல்சன் மண்டேலா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறை வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு பொலிஸ் தலைமையகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்த போதே அவர் கைது செய்யப்பட்டார்.

தென்னாபிரிக்க அரசுக்கும் ஆபிரிக்க விடுதலை அமைப்புக்களுக்குமிடையே சில மாதங்களுக்குமுன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி இந்த இறைக்கைதிகள் ஏப்ரல்மாதம் விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இதேவேளை தங்களின் விடுதலையை வலியுறுத்தி குறித்த அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளினுள் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள்.

திருமதி வின்னி மண்டேலாவுக்கு ஆபிரிக்க நீதிமன்றத்தினால் கடத்தல் கூடத்-த குற்றச்சாட்டு ஒன்றிற்காக 6 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளமையும், அவர் அதனை ஆட்சேபித்து மேல்முறையீடு செய்து பிணை விடுதலையில் உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### சிறுவிளம்பரம்

**விற்பனைக்கு**

குளியலறை, மலசல கூடம், சுழுவு நீர்த் தொட்டி கண்ணாடியாலியத்தின் அழுக்ககற்றிப் பச்சிலைும் வெண்மை பெற மிச்சிலைத் திரவ சவர்க்காரம் அரைப் போத்தல் 45 ரூபா மட்டுமேயளிக்கும் விற்பனையாகிறது. 05093

---

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**
**யாழ்ப்பாணக் கிளை**
**பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு**

### அங்கத்தினர் கூட்டம்

மேற்படி கூட்டம் 26 05 91 பி. ப 3 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர் அனைவரும் இதில் பங்கு கொள்ளும்படி அழைக்கிறோம். புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறும்.

73, கண்டி றோட், ச. சிவானந்தராசா
யாழ்ப்பாணம். கௌரவ செயலாளர்.
21. 05. 1991 05102

---

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**
**யாழ்ப்பாணக் கிளை**
**கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு**

### அங்கத்தினர் கூட்டம்

மேற்படி கூட்டம் 26. 05. 91 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4. 30 மணிக்கு கரவெட்டி தருமலிங்கம் வித்தியாலயத்தில் நடைபெறும். கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர் அனைவரும் இதில் பங்குபற்றிக்கொள்ளும் படி அழைக்கிறோம். இதில் புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறும்.

73, கண்டி றோட், ச. சிவானந்தராசா
யாழ்ப்பாணம். கௌரவ செயலாளர்.
22. 05 1991 05103

---

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**
**யாழ்ப்பாணக் கிளை**
**நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு**

### அங்கத்தினர் கூட்டம்

மேற்படி கூட்டம் 27.5.1991 திங்கட்கிழமை பி. ப. 3.00 மணிக்கு யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும். நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர் அனைவரும் இதில் பங்குபற்றிக் கொள்ளும்படி அழைக்கின்றோம். இதில் புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறும்.

73, கண்டி றோட், ச. சிவானந்தராசா
யாழ்ப்பாணம். கௌரவ செயலாளர்
22 05 1991 05104

---

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**
**யாழ்ப்பாணக் கிளை**
**கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு**

### அங்கத்தினர் கூட்டம்

மேற்படி கூட்டம் 28 05.1991 பி.ப. 3.00 மணிக்கு அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலியில் நடைபெறும். கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர் அனைவரும் இதில் பங்குகொள்ளும்படி அழைக்கின்றோம் புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறும்.

73, கண்டி றோட், ச. சிவானந்தராசா
யாழ்ப்பாணம், கௌரவ செயலாளர்.
22.05.1991 05105

---

# ராஜீவ்கொலை புலனாய்வு ஆரம்பம்

## சோனியா தெரிவுக்கு பீ. ஜே. பீ. கண்டனம்

'பிரதமராக மீண்டும் வருவதாகவிருந்தால் எனது பாதுகாப்பைப்பற்றி அக்கறை கொள்ளாமல் பகிரங்கமாகப் பிரசாரம் செய்வதைத் தவிர வேறு வழியில்லை.'

இவ்வாறு குண்டு வெடிப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி 'நியூ யோர்க் டைம்ஸ்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தி கொலைப்பட்ட ஸ்ரீ பெரம்புதூருக்கு அவர் காரில் வந்து கொண்டிருக்கையில் அதே காரில் அவருடன் கூட வந்த 'நியூயோர்க் டைம்ஸ்' நிருபருக்கு ராஜீவ் இப் பேட்டியினை வழங்கியிருந்தார். இதுவே அவர் வழங்கிய இறுதிப் பேட்டியும் ஆகும்.

'தற்பொழுது பகிரங்கமாகப் பிரசாரம் செய்கிறீர்களே, பயமில்லையா?' என நிருபர் ராஜீவிடம் கேட்ட போதே இந்தப்பதிலை அவர் அளித்திருந்தார்.

### இலங்கைசார்பில் பிரதமர் டி. பி.

இதேவேளை இன்று நடைபெறவுள்ள ராஜீவின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றுவதற்கென இலங்கையின் சார்பில் பிரதமர் டி. பி விஜயதுங்காவும், ஜனாதிபதியின் வெளி விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனும் இந்தியா பயணமாகியுள்ளனர்.

### மேனகாவும் அஞ்சலி

ராஜீவின் மைத்துனியும் ராஜீவ் குடும்பத்துடன் சமீபகாலமாக கருத்துவேறுபாடு கொண்டுள்ளவருமான சஞ்சேய்காந்தியின் மனைவி திருமதி மேனகாகாந்தி புதுடில்லி திமூர்த்திபவனுக்குச் சென்று மலர்வளையம் சாத்தி அவருக்கு அஞ்சலி செலுத்தினார்.

### ஜனாதிபதி புஷ்சின் குடும்ப நண்பர்

இவரின் மரணத்துக்கு அமெரிக்க பாராளுமன்றத்தில் ஒரு நிமிட நேரமௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. ராஜீவ்காந்தி தனது தனிப்பட்ட குடும்பநண்பர் எனவும் தான் தனிப்பட்ட முறையில் துக்கம் அனுஷ்டிப்பதாகவும் ஜனாதிபதி புஷ் தெரிவித்தார்.

### சோனியா தெரிவுக்கு பீ. ஜே. பீ கண்டனம்

இதேவேளை இந்திரா காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராக சோனியாகாந்தி தெரிவு செய்யப்பட்டுள்ளதை பாரதீய ஜனதாக்கட்சி கண்டித்துள்ளது. நேரு குடும்பத்தின் ஒரு அங்கத்தவரையே மீண்டும் தலைவராக தெரிந்ததையே இக் கட்சி கண்டித்துள்ளது.

### புலனாய்வு ஆரம்பம்

இக் கொலை தொடர்பான விசாரணையை மேற்கொள்வதற்காக சிறப்புப் புலனாய்வுக்குழுவொன்று புதுடில்லியிலிருந்து நேற்று சென்னையை வந்தடைந்தது. இக்குழுவில் இந்தியாவின் சிறந்த புலனாய்வு மற்றும் பந்தோபஸ்து அதிகாரிகள் அங்கம் வகிக்கின்றார்கள்.

### பொலிஸ் கட்டு 12 பேர் பலி

இது இவ்வாறிருக்க ராஜீவின் மரணத்தையடுத்து பல வேறு பகுதிகளிலும் வன்செயல்கள் தொடர்வதாக அறிவிக்கப்படுகின்றது. வன்செயல்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதில் பன்னிரெண்டுக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர்.

### பிரமாண்டமான ஏற்பாடுகள்

ஏழு வருடங்களுக்குமுன்னர் இந்திராகாந்தியின் இறுதிக் கிரியைகளுக்கு செய்யப்பட்ட அதே வகையிலான பிரமாண்டமான ஏற்பாடுகள் ராஜீவின் இறுதிக்கிரியைகளுக்கும் செய்யப்பட்டுள்ளன. ஜமுனா நதிக்கரையில் உள்ள நேரு, இந்திராகாந்தி, சஞ்சேய்காந்தி ஆகியோர் தகனம் செய்யப்பட்ட அதே இடத்திலே ராஜீவின் பூதவுடலும் இன்று பிற்பகல் தகனம் செய்யப்படும்.

### இன்று இங்கும் தேசிய துக்கதினம்

ராஜீவின் இறுதிக்கிரியைகள் நடைபெறும் இன்றைய தினம் இலங்கையில் தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

### மேலும் ஒருவர் நேற்று மரணம்

குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த மற்றொரு பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் நேற்று சென்னை மத்திய மருத்துவ மனையில் மரணமானார். இவரையும் சேர்த்து இச் சம்பவத்தில் கொல்லப்பட்டோரின் தொகை பதினேழாக அதிகரித்துள்ளது.

---

## கைதடியில் ஆண்டு விழா

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலைய 32 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இம் மாதம் 25, 26 ஆம் திகதிகளில் பல நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

நாளை 25 ஆம் திகதி பிற்பகல் இரண்டு மணிக்கு வளர்மதி சனசமூக நிலையத்தில் இல்ல விளையாட்டுப் போட்டி இடம் பெறும்.

26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு அங்கு கலைகலாசார நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

அன்றைய நிகழ்ச்சியில் நடனங்கள், வில்லிசை என்பனவும் இடம் பெறும்.

---

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி

### செல்வன் குணரத்தினம் ஈஸ்வரன்

(காரணவாய் புளக்குடியிருப்பு மகாவித்தியாலயம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், தேவிபுரத்தை வதிப்பிடமாகவும் கொண்டவர்)

அன்னையின் மடியில் இறைவனடியில்
12.01.1973 14.04.1991

திருச்சிற்றம்பலம்

பித்தா பிறைசூடி பெருமானேயருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள் அத்தாவுனக்
காளாய் இனி அல்லேனெனலாமே.

உள்பிரிவால் துயருறும்:

தேவிபுரம், அப்பா, அம்மா, அண்ணன்,
உடையார்கட்டு, அக்கா. தங்கைமார். அத்தான்
அண்ணி, ஆருயிர் நண்பர்கள்
05010 மா. மகாலிங்கம், நா. அழகேஸ்வரன்

---

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



மலர்ந்தாள் 2? — 10 — 1968
உதிர்ந்தாள் 27 — 12 — 1990

### திருமதி கேதாரகௌரி லோகநாதன்

கேதா!
பாசத்தில் மொட்டவிழ்ந்த
முல்லை மலரே!
பாடித்திரிந்த பௌர்ணமியே!
தேடிக்காணா தொலைவுக்கு
சென்று விட்ட பனிமலரே!
ஓடியது ஓர் ஆறுமாதமென்றாலும்
ஓயாதம்மா,
உன் இனிப்பலைகளும்,
உன் நினைவலைகளும்.

நின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்

S. பஞ்சலிங்கம் அம்மா, அப்பா, அக்கா சௌமி,
மறவன்புலோ மேற்கு, அத்தான்மார், தங்கை தயா,
சாவகச்சேரி, தம்பி அங்கா, மகன் அருண்
05106 ஐயா, அம்மம்மா,

### ★ ஆணைக்குழுமுன் எம்.எஸ்.எப். இணைப்பதிகாரி சாட்சியம்

# மடுப்பகுதியில் வான் தாக்குதல்கள்

## அன்றாடவாழ்க்கையின் ஒரு அங்கமாகிவிட்டது

'மடுப்பகுதியில் தினமும் குண்டு போடும் சத்தம் கேட்கும். அத்துடன் குண்டு போடும் விமானங்களின் சத்தமும் ஹெலியின் சத்தமும் கேட்கும். குண்டுபோடுவது அந்தப்பகுதியில் அன்றாட வாழ்க்கையின் ஒரு அங்கமாகி விட்டது.'

இவ்வாறு மடுவில் பிரான்ஸ் வைத்தியக் குழுமீது ஆகாயப் படை மேற்கொண்ட தாக்குதல் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட தனிநபர் ஆணைக்குழுமுன் சாட்சியமளித்த மடு அகதிமுகாம் எம்.எஸ்.எப் மருத்துவ இணைப்பதிகாரி டாக்டர் ஜிதின் இல்பர்ட் தெரிவித்தார்.

நான் ஏப்ரல் 13 ஆம் திகதி இலங்கை வந்தேன் எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட ஜிதின் கடந்த மூன்றாம் திகதி மடு-புதுக்குளத்தில் இடம் பெற்ற தாக்குதல் பற்றி ஆணைக்குழுவுக்கு விளக்கினார்.

கடந்தவாரம் நான் மன்னார் மாவட்டத்தை விட்டுக் கொழும்புக்கு வந்தேன் அதுவரை அப்பகுதியில் விமானக் குண்டுத் தாக்குதல் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது எனச் சாட்சி அங்கு தெரிவித்தார்.

சாட்சியைப் பிரிகேடியர் மேர்வின் சமரக்கோன் குறுக்கு விசாரணை செய்தார்.

## ஐந்து மாதத் தென்னங்கன்றில் ஐந்து இளங் குரும்பைகள்

ஐந்து மாதத் தென்னங்கன்று ஐந்து இளங்குரும்பைகளுடன் பலனை தள்ளியுள்ளது.

வடமராட்சி, துன்னாலை வடக்கு செல்லன் என்னுமிடத்தில் உள்ள வேலுப்பிள்ளை செந்தில்வேல் என்பவரது வீட்டிலேயே மேற்படி அதிசயத் தென்னங்கன்று வளர்கின்றது.

இதன் உயரம் இரண்டு அடியாகும். மேற்படி தென்னங் கன்றினை அப்பகுதி மக்கள் பெருந்திரளாகச் சென்று பார்வையிட்டு வருகின்றனர். (39)

## விடுபட்ட மதிய உணவு முத்திரை மாணவர்க்கு விரைவில் கிடைக்கும்

கடந்த வருடத்தில் யாழ் மாவட்டத்திலுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படாது விடப்பட்ட மதிய உணவு முத்திரைகளை மீண்டும் தருவித்து வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்பொருட்டு 1990 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் விடுபட்ட மாதங்களுக்கான உணவு முத்திரைகளை திருப்பி அனுப்பி வைக்கும்படி கொழும்பிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இந்த உணவு முத்திரைகள் திரும்ப வந்து சேர்ந்ததும் மாணவர்களின் குறித்த காலத்திற்குரிய வரவு இடாப்புக்களுக்கேற்ப அவை பூரணப்படுத்தப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்படுமெனச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (74)

## சங்கீத அறிமுறைப் பரீட்சை

### ஜூன் 15,16 ஆம் திகதிகளில் நடைபெறும்

வட இலங்கை சங்கீத சபையினரால் இரண்டாந்தரம் தொடக்கம் ஆறாந்தரம் வரையிலுமான சங்கீத அறிமுறைப் பரீட்சை ஆனிமாதம் 15 ஆம் 16 ஆம் திகதிகளில் சகல கோட்டங்களிலும் தெரிந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளில் நடைபெறஉள்ளது.

யாழ் கோட்டத்துக்கான பரீட்சை மண்டபங்களாக யாழ் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி என்பனவும் சாவகச்சேரி கோட்டத்துக்கு டிறிபேக் கல்லூரியும், பண்டத்தரிப்பு கோட்டத்துக்கு விக்ரோறியாக் கல்லூரி, மல்லாகம் ம. வித்தியாலயம் என்பனவும் மருதனாமடம் கோட்டத்துக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி என்பனவும் வடமராட்சிக் கோட்டத்துக்கு நெல்லியடி ம. ம. வித்தியாலயம், வடஇந்து மகளிர் கல்லூரி என்பனவும் வேலணைக் கோட்டத்துக்கு வேலணை வைத்தியலிங்கம் துரைச்சாமி ம. மகாவித்தியாலயமும் பரீட்சை மண்டபங்களாக ஒதுக்கப்பட்டுள்ளன. (78)

## மர்ம ஆள்கடத்தல் பீதி;

### மட்டு.கலாசாலையில் மாணவர்வரவுஇல்லை

மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் வகுப்புகள் இரண்டாம் தவணைக்காக ஆரம்பிக்கப்பட்டபோதிலும் மாணவர் வரவு குறைவாகவே உள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பில் திடீரென இடம்பெறும் மர்ம ஆள்கடத்தல் சம்பவங்களைவடுத்தே கலாசாலை விரிவுரைகளுக்குச் செல்ல ஆசிரியர்கள் தயங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## திருமண விலக்குச் சட்டத்தில் பல புதியதிருத்தங்கள் வருகின்றன

திருமண விலக்குச் சட்டத்துக்கு பல திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளன.

பொதுச் சட்டத்தின் கீழ் அமைந்ததான தம்பதிகள் ஏழு வருடகாலம் பிரிந்திருந்தாலேயே திருமண விலக்கு அளிக்க முடியும் என்பதிலும் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இது பிராயபிள்ளைகள் பராமரிப்பு, பாதுகாப்புத் தொடர்பாக இன்றைய வழமை குறித்து சம்பந்தப்பட்ட குழந்தையின் நலனே பிரதானமாகக் கொள்ளப்படும்.

இது தொடர்பாகப் பல திருத்தங்களும் திருமண விலக்குச் சட்டத்தில் கொண்டுவரப்படவுள்ளன.

## கப்டன் மில்லர் போட்டிகள்

கரும்புலி கப்டன் மில்லர் ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை 25ஆம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

தமிழீழத்தில் உள்ள அறுபத்தாறு கழகங்கள் இந்த போட்டியில் பங்கு கொள்கின்றன.

இப்போட்டியில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (39)

## வேலாயுதம் நியமனம்

யாழ்ப்பாணக் கோட்டக் கல்வி அலுவலகத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளராக சி. வேலாயுதம் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் யாழ்மாவட்டத்திற்கு இடமாற்றப்படுவதற்கு முன்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது (ம-10)

## காவலூர்ப் பகுதி வீடுகள் இராணுவத்தால் குண்டு வைத்துத் தகர்ப்பு

ஊர்காவற்றுறைப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தங்களின் பாதுகாப்புக்கருதி நாரந்தனை, சரவணை ஆகிய பகுதிகளிலுள்ள வீடுகளைக் குண்டு வைத்துத்தகர்த்து வருகின்றனர்.

கடந்த சில வாரங்களாக இத்தகைய குண்டு வைத்துத்தகர்க்கும் நடவடிக்கைகள் அப்பகுதியில் இடம்பெற்று வருகின்றன.

இதே வேளை அப்பகுதிகளில் இருந்து இரவு பகலாக ஷெல்தாக்குதல்களும் இடம்பெற்று வருவதாக அங்கிருந்து வருபவர்கள் தெரிவிக்கின்றனர். (20)

## 'ஐ.தே.க.இம்முறை பெற்ற வாக்குகள் கடந்த தேர்தலிலும் குறைவானவை'

சமீபத்திய உள்ளூராட்சித் தேர்தலில் தமது கட்சி இருமாபெரும் வெற்றி கிடைத்திருப்பதாக ஐ.தே.க பெருமிதம் அடைந்து கொண்டாலும் கடந்த பொதுத் தேர்தலிலும் பார்க்க குறைவான வாக்குகளே இம்முறை ஆளும் கட்சிக்குக் கிடைத்திருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் ஜே. ஆர். பி. சூரியப்பெரும அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

"மொத்தம் 237 சபைகளில் ஐ.தே.க. 190 ஐக் கைப்பற்றியுள்ள போதிலும் ஐ.தே.கவுக்கும் இ.தொ.கா.வுக்கும் கடந்த பொதுத் தேர்தலில் கிடைத்த வாக்குகளிலும் பார்க்க (57.4% கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் பெற்ற வாக்குகள் வீதம் (52.43%) குறைந்துள்ளது.'

'ஐ.தே.க-இ.தொ.கா. இணைந்தவாக்கு இருவருடங்கள் 4 மாதங்களில் கொண்ட குறைந்த ஒரு காலப்பகுதியில் 5 சதவிகிதத்துக்கும் மேலாகக் குறைந்துள்ளது" என இவ் அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

## வேதனம் கிடைத்தது

பண்டத்தரிப்புக்கல்விக்கோட்டத்தால் 1988 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் நியமிக்கப்பட்ட ஆரம்ப ஆசிரியர்களுக்கான சேவை முன்பயிற்சிக்குரிய வேதனம் இம் மாதச் சம்பளத்துடன் வழங்கப்பட்டது.

1988 ஆம் ஆண்டு ஆவணி மாதம் நடைபெற்ற 11நாள் பயிற்சிக்குரிய வேதனமான 920ரூபா 2வது. 9 மாதங்களுக்குப் பிறகே இவ் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஏனைய கோட்டத்தைச் சேர்ந்த இவ்வகை ஆசிரியர்களுக்கான பயிற்சி வேதனம் ஏற்கனவே வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது ம-10

## காங்கிரஸ் தலைமையை ஸோனியா துறக்கலாம்

### புதிய தலைவராக நரசிம்மராவுக்கே அதிக வாய்ப்பு!!!

அகில இந்திய இந்திரா காங்கிரஸின் எதிர்கால புதிய தலைவராக நரசிம்மராவே தெரிவு செய்யப் படுவாரென அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்திராகாங்கிரஸ் கட்சியின் தலைவராக திருமதி சோனியா காந்தி தெரிவு செய்யப்பட்டுள்ள போதிலும் அதனை ஏற்றுக் கொண்டதாக அவர் இன்னும் அறிவிக்கவில்லை.

அரசியலில் ஈடுபடுவதில் திருமதி சோனியா காந்தி ஆரம்பம் முதலே அக்கறையின்றி இருந்துவருவதினால் இப்புதிய நியமனம் ஒரு தற்காலிக ஏற்பாடாகவேயிருக்கு மெனவும் அவதானிகள் கருது கின்றனர்.

பொதுத் தேர்தல் வாக்களிப்பு நடைபெறவுள்ள இவ்வேளையில், காங்கிரஸ் கட்சிக்கு சார்பாக அனுதாப வாக்குகளைப் பெறவே திருமதி சோனியா காந்தி நியமிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காங்கிரஸின் தலைமைப் பதவிக்கு பலர் போட்டியிடலாமெனவும் இதனால் கட்சிக்குள்ளேயே பிளவுகள் தோன்றலாமெனவும் அவதானிகள் அச்சம் தெரிவிக்கின்ற போதிலும் ஆரம்பத்தில்குறிப்பிட்ட சிலகாலத்திற்கு காங்கிரஸ் தலைவராக பதவி புரிவதற்கான வாய்ப்பு முன்னாள் மத்திய அமைச்சரான நரசிம்மராவுக்கே கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுத் தேர்தல் கணிப்புக்கள் முடிவுற்றவுடன் சோனியாவுக்குப் பதிலாக புதிய தலைவர் அறிவிப்பு வெளியிடப்படுமெனவும் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

## இந்தியப் பிரதமராக பிரபாகரன்; விரும்புகிறார் தமிழகச் சிறுமி



சென்னையிலிருந்து வெளியாகும் "ஹிந்து" பத்திரிகை 10 வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்ட இளம் வாசகர்களிடையே அடுத்த இந்தியப்பிரதமர் யார் என்ற அபிப்பிராய வாக்குக்கணிப்பொன்றை சில தினங்களுக்கு முன்னர் நடத்தியது.

இதற்காக ராஜீவ் காந்தி வி.பி. சிங், எல்.கே. அத்வானி, சந்திரசேகர் ஆகியோரின் புகைப்படங்களையும் இப்பத்திரிகை கருத்துக் கணிப்பு படிவத்தில் பிரசுரித்திருந்தது.

சில இளம் வாசகர்கள் பொறுப்புணர்வுடனும் அவநம்பிக்கையுடனும் எதுவித தெரிவையும் செய்யாமல் பத்திரிகை கத்தரிப்பை அனுப்பியுள்ளமை ஒருபக்கமிருக்க, இங்கு முக்கியவிடயமே இனித்தான் வருகிறது.

இக்கணிப்பில் பங்குபற்றிய மகள்கோட்டையைச் சேர்ந்த சிறுமி ஒருவர் அடுத்த இந்தியப் பிரதமராக வரவேண்டியவரின் படம் இருக்க வேண்டிய இடத்தில் எமது விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரனின் படத்தை ஒட்டி 'ஹிந்து' அலுவலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். இச்சிறுமியின் செயல் கருத்துக் கணிப்பை நடாத்திய நிறுவனத்திற்குப் பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளதாம்.

## அம்பாறையில் ராணுவத்துக்குபதில்

### விசேட அதிரடிப்படைச் சேவை

அம்பாறை மாவட்டத்தில் முக்கிய பாதுகாப்புக்கடமைகளிலிருந்து இராணுவத்தினர் பகுதி பகுதியாக விலக்கப்பட்டு வருவதாக கொழும்புப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

அம்பாறையில் தற்போழுது [illegible] வரும் இராணுவத்தினரின் இடங்களுக்கு விசேட அதிரடிப்படையினர் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டு வருகின்றனர்.

அம்பாறையிலிருந்து விலக்கப்படும் இராணுவத்தினர் வடபகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டு வருவதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

# வாழைச்சேனையில் இருவர் கடத்தப்பட்டுக் கொலை

வாழைச்சேனைப் பகுதியில் உள்ள கண்ணகி கிராமத்தில் கடந்த வெள்ளி இரவு நான்கு இளைஞர்கள் இனம் தெரியாத சிலரால் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கறுப்புத்துணியால் முகத்தை மறைத்துக் கட்டியிருந்த இந்தக்குழுவினர் கடத்தப்பட்ட இளைஞர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் பெயரைச்சொல்லி அழைத்து கடத்திச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடத்தப்பட்டவர்களில் இருவரின் சடலங்கள் மறுநாளே வாழைச்சேனை ஆற்றங்கரையில் மீட்கப்பட்டன. மற்றைய இருவரின் விபரங்கள் தெரியவில்லை.

# ரோகண விஜேவீராவின் சகா அம்பாந்தோட்டையில் கைது

ஜே. வி. பி. இயக்கத் தலைவர் ரோகண விஜேவீராவின் நெருங்கிய சகாவான 'பொடி அப்புஹாமி' அம்பாந்தோட்டை ஆஸ்பத்திரியில் வைத்துக் கைது செய்யப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அந்திரிஸ் ஏக்கநாயக்கா என்ற இவர் 'பொடி அப்புஹாமி' என்ற பெயரில் நடமாடிவந்தாகவும் பொலிஸ் வட்டாரங்கள் கூறின.

1970 முதல் ஜே. வி. பியுடன் இவர் வைத்திருந்த நெருங்கிய தொடர்புகள் குறித்த விபரங்கள் தற்போது வெளிவந்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 88

# தனியார்துறை ஊழியர் ஓய்வூதியம் அடுத்த மாதம் சட்டமாக்கப்படும்

தனியார்துறை ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தைதொழில் அமைச்சு அமுல் செய்யவுள்ளது

இத்திட்டம் தொடர்பான மசோதா அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகதொழில் அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது சுமார் நாற்பது லட்சம் தனியார்துறை ஊழியர்கள் உள்ளதாகவும், இந்த ஓய்வூதியத் தகுதியைப்பெற பதினைந்து வருடம் சேவையாற்ற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஓய்வூதியத்திட்டத்தை அமுல் செய்வதன் மூலம் ஏற்கனவே இருந்துவரும் சேமலாபநிதிக் கொடுப்பனவுகளில் எந்தப் பாதிப்பும் இருக்காது எனவும் அவர் மேலும் சொன்னார்.

# யாழ் ஆஸ்பத்திரி திருத்தவேலைக்கு 50 லட்சம் ரூபா வழங்கப்படும்

யாழ் பெரியாஸ்பத்திரியைத் திருத்தி அமைப்பதற்கு சுகாதார அமைச்சு 50 லட்சம் ரூபாவை வழங்கச் சம்மதித்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னர் 15 லட்சம் ரூபாவையே அமைச்சு வழங்கியதாகவும் அது திருத்த வேலைக்கு போதாது என ஆஸ்பத்திரி நிர்வாகம் சுகாதார அமைச்சிற்கு தெரிவித்ததையடுத்தே இந்த 50 லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

ஆனால் இந்த 50 லட்சம் ரூபாவும் பூரண திருத்த வேலைகளுக்குப் போதாது எனவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. 71, 74


யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
இலங்கை

யாழ் பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்தின் 1989/90ஆம் கல்வி ஆண்டின் இரண்டாவது அரை ஆண்டுக்கான விரிவுரைகள் 1991 ஆம் ஆண்டு ஆனி மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்பதை இத்தால் விஞ்ஞான பீட மாணவர்களுக்கு அறியத்தருகின்றேன. முன்பு இடப்பிடப்பட்டவாறு விரிவுரைகள் 1991 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்படமாட்டாது.

05107 பதிவாளர்


# காசுக்கட்டளையை மாற்றுவதற்கு வடபகுதி தபாலகங்களில் ஏற்பாடு

ஆறுமாத காலம் முடிவடைந்த உள்ளூர் காசுக்கட்டளைகளை மேலதிக கட்டணம் எதுவும் அறவிடாது எதிர்வரும் 31. 12. 91 ஆம் ஆண்டு வரை யாழ்மாவட்ட அஞ்சல் அலுவலகங்களில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட தபால் அத்தியட்சகர் எஸ். சடாட்சர நாதன் அண்மையில்கொழும்பு சென்று கட்டுப்பாட்டாளரைச் சந்தித்துப் பேசியதை யடுத்து காசுக்கட்டளைகள் மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுக் காசுக்கட்டளைகளும், பிரித்தானிய தபாற் கட்டளைகளும், காசுக்கட்டளைகள் கட்டுப்பாட்டாளரின் அனுமதி பெற்ற பின்னர் கொடுப்பனவு நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான கற்று நிருபம் யாழ்மாவட்ட அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

ஆறு மாதங்களுக்கு மேல் மாற்றப்படாத காசுக் கட்டளைகளை வைத்திருக்கும் பொதுமக்கள் இம் மாதம் 29 ஆம் திகதிக்கு பின்னர் தங்கள் பகுதி தபாலதிபர்களுடன் தொடர்பு கொண்டுவேண்டிய விபரங்களை அறியலாமெனவும் அவர் தெரிவித்துள்ளார். 33

## தீவுப் பகுதி மக்கள்

# 8 ஆம் 9 ஆம் இலக்க உலர் உணவு 31 ஆம் திகதிக்குள் பெறவேண்டும்

இராணுவ நடவடிக்கை காரணமாக தீவுப் பகுதிகளில் இருந்து வந்து குடாநாட்டிற்கு குடிபெயர்ந்தவர்களுக்கு தற்போது விநியோகிக்கப்பட்டு வரும் 8 ஆம், 9 ஆம் இலக்க உலர் உணவுப் பொருள்களை இம் மாதம் 31ந் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ள வேண்டுமெனத்தெரிவிக்கப்படுகிறது.

புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஜுரையேயாழ். சிறாம்பியடியிலுள்ள கட்டடம், யாழ் கோணவில் தோட்டம் ஆகிய இடங்களிலும் வைத்து நிவாரணப் பொருள்களை விநியோகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (19)

# 400 ஏக்கர் நெற்செய்கை அறக்கொட்டியானால் பாதிப்பு

பூநகரி பல்லவராயன்கட்டு கரியாலை நாகபடுவான் குள நீர்ப்பாசன திட்டத்தில் 400 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற் செய்கையில் அறக்கொட்டியான் பூச்சித் தொல்லை காரணமாக பயிரழிவு பெருமளவில் ஏற்பட்டுள்ளது.

எழுபத்தைந்து வீதமான காணியில் இந்தப் பூச்சித் தொல்லை நிலவுவதால் இப் பயிர்ச்செய்கை மேற்கொண்டும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். (ப-35)

# ஹெலியைச் செலுத்திய விமானி ஆணைக்குழு முன் சாட்சியம்

இம் மாதம் மூன்றாம் திகதி மகியங்கனை பிரான்ஸ் வைத்தியர் குழுவின் மீது தாக்குதலை நடாத்திய ஹெலிகொப்டரைச் செலுத்திச் சென்ற விமானப் படை விமானி பிரசன்ன பயோ இது குறித்து விசாரணை செய்யவென நியமிக்கப்பட்ட தனிநபர் ஆணைக்குழு முன் சாட்சியமளித்தார்.

இவரது சாட்சியம் அங்கு இரகசியமாகவே பதிவப்பட்டது என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சிங்களத்தேர்ச்சியின்மையால்

# 1978 இல் பதவியிழந்தவருக்கு எதுவித நிவாரணமும் இல்லை

சிங்களத் தேர்ச்சியின்மை காரணமாக 1978 இல் பதவியிழந்த விவசாய சேவை உத்தியோகத்தர்களின் நிலைமை பதின்மூன்று வருடங்களாகியும் எதுவித நிவாரணமும் கிடைக்கவில்லை என கிழக்கு மாகாண விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டும் இதுவரை எந்தவித நடவடிக்கையும்எடுக்கப்படவில்லை எனவும் இச்சங்கம் தெரிவித்துள்ளது.

# இளம்பெண்ணின் முண்டத்தில் மேலும் பல தடயப் பொருள்கள்

ராஜீவின் கொலைக்கு இளம்பெண் ஒருவர் தலைமையிலான பெண்கள் தற்கொலை அணியொன்றே காரணம் என இந்திய மத்திய புலனாய்வுத் துறை தெரிவித்திருக்கிறது.

குண்டுவெடிப்பு இடம் பெற்ற இடத்தில் இதற்கான சில தடயங்கள் காணப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

அங்கு அச்சம்பவத்தில் மரணமான இளம்பெண்ணின் உடல் முண்டப் பகுதியில் இடுப்பு பெல்ட் ஒன்றும், மற்றும் வயர்கள், வெடிக்கவைக்கும் கருவிகள், வயர், பற்றரி போன்றவையும் வேறும் சில கருவிகளும் காணப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

## பனம் சாராய வடிசாலை திறப்பு விழா

புதுக்குடியிருப்பில் புதிதாக அமைக்கப்பட்ட முல்லை. மாவட்ட பனம் சாராய வடிசாலை இம் மாதம் 29 ஆம் திகதி புதன்கிழமை பனம் பொருள் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. தி. சபாரத்தினத்தால் திறந்து வைக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவில் உள்ள தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்தப் பனம் சாராய வடிசாலையை அமைத்துள்ளனர். (38, 12)

---

கொக்குத்...

முதல் மணலாறு இராணுவ முகாமில் இருந்து கொக்குத்தொடுவாய் நோக்கி ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது.

மாலை 6. 30 மணியளவில் கொக்குத்தொடுவாய்ப் பகுதிக்கு வந்த அவ்ரோ விமானம் ஒன்று குண்டு வீச்சுத்தாக்குதலை நடாத்தியது (71)

---

மட்டு...

லப்பட்டனர்.

மட்டக்களப்பு - திருமலை வீதியில் உள்ள தாண்டவன் வெளிப்பகுதியில் வைத்து இரவு 10 மணியளவில் இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். 38

---

புலன்...

குறித்து இலங்கை அரசிடம் கேட்டால் புலன் விசாரணையை தொடர்வதற்கான சகல வசதிகளையும் நாம் அளிப்போம் என ஜெனரல் ரணதுங்க மேலும் தெரிவித்தார்.

---

திருவான்மியூரில்...

தெரிவித்தனர். எனினும் மேலதிக விபரங்கள் எதையும் தெரிவிக்க பொலிஸார் மறுத்து விட்டனர்.

இதேசமயம் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட இடத்துக்கு அருகில் நின்ற பெண்ணின் சடலம் அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

---

மதுவுக்கு—

வைக்கப்பட்டுள்ளன

தற்போது இந்த அகதி முகாமில் முப்பத்தையாயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் தங்கியுள்ளனர் எனவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ப-11

---

வெசாக்...

அரசு இந்த யுத்தநிறுத்த அறிவிப்பை வெளியிடுவதாக தெரிவிக்கப்பட்டது

இத்தினங்களில் போராளிகள் நிபந்தனையின்றி சரணடைந்து விடவேண்டும் எனவும் ஜெனரல் ரணதுங்க கேட்டுள்ளாராம்.

---

தலைமைப்...

திருக்கும் தற்போது ஏற்பட்டுள்ள பேரிழப்பில் இருந்து மீளாத நிலையில் தலைமைப் பதவியை ஏற்பது முடியாத காரியம் என சோனியா குறிப்பிட்டார்.

---

அவசர...

நடாத்தினார்.

இதே சமயம் ஒத்திவைக்கப்பட்ட தேர்தல்கள் குறித்தும் தேர்தல் ஆணையாளர் சேஷன் ஜனாதிபதியுடன் பேச்சு நடாத்தியுள்ளார்.

---

தமிழகத்தில்...

ளர்.

தமிழகத்தில் அமைதியைப் பேணுமாறு சகல அரசியல் கட்சிகளும் பொது மக்களைக் கோரியுள்ளன.


கண்ணீர் அஞ்சலி

அமரர் ப. ஏகாம்பரம்

(முன்னாள் அதிபர்)

எமது கல்லூரியில் ஆசிரியராகவும், அதிபராகவும் அளப்பரிய சேவைகளை ஆற்றிய தலைசிறந்த ஆசானாகத் திகழ்ந்து வெளிநாடு சென்று வாழ்ந்த அமரர் ஏகாம்பரம் அவர்களின் நிரந்தரப் பிரிவால் வேதனையுறும் முன்னாள் மாணவர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள் அனைவர் சார்பிலும் அஞ்சலி செலுத்துவதோடு அவர்தம் உறவினர்களுக்கும் ஆறுதல் கூறுகிறோம்.

ஹாட்லி கல்லூரி, பழைய மாணவர் மன்றம்
பருத்தித்துறை 05112


இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷேர்ஸ், (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி "லக்ஷ்மி"பில்டிங்"கில் உள்ள அச்சகத்தில் 24. 05.1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.